விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 மார்கழி 5 ஜ. ஆங். பிறை 2 இதழ்: 239

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 20-12-1990

## கிழக்கு நிலை குறித்து தளபதிகள் அவசர மாநாடு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலிளின் தாக்குதல்கள் அதிகரித்திருப்பது குறித்து நேற்று படைத் தளபதிகள் கலந்துகொண்ட அவசர மகாநாடொன்று நடைபெற்றதாகத் தெரியவருகிறது.

இம்மாநாட்டில் இராணுவ, பொலிஸ், விமானப்படைத் தளபதிகளும் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளும் கலந்துகொண்டதாகவும் கூறப்படுகிறது.

கிழக்கில் திருமலை முதல் அம்பாறை வரையிலான பிரதேசத்தில் கடந்த 20 நாட்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி பிரேமா முக்கிய அறிவிப்பு

(கொழும்பு)

இனப் பிரச்சனைத் தீர்வு தொடர்பான சில முக்கிய முடிவுகளை, இம்மாதம் 23ந் திகதி ஞாயிற்றுக்கிழமை

(4ம் பக்கம் பார்க்க)

# பலாலி - கட்டுவன் மோதலில் 8 பெண் போராளிகள் மரணம்

## பல இராணுவம் பலி

(யாழ்ப்பாணம்)

**பலாலி - கட்டுவன் பகுதியில் நேற்றுக்காலை இடம் பெற்றகடும் மோதலில் இராணுவ தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. முன்னேற முயன்ற இராணுவத்தை அடித்து விரட்டி திரமுடன் போராடிய எட்டு பெண் போராளிகள் வீரமரணத்தை தழுவிக்கொண்டனர்.**

கட்டுவன் பகுதியில் நேற்று காலை ஆறு மணியளவில் இடம்பெற்ற கடும்மோதலில் இராணுவதரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. புலிகள் தரப்பில் 8 பெண் போராளிகள் வீரமரணமடைந்தனர்.

கட்டுவன் முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தை பெண்புலிகள் வழிமறித்து உக்கிர தாக்குதலை மேற்கொண்டனர். பலத்த இழப்புகளுடன் இராணுவம் பின்வாங்கியது. இதன்போது கொல்லப்பட்ட, காயமடைந்த இராணுவத்தினரை ஏனையவர்கள் தூக்கியும் இழுத்தும் சென்றனர்.

முகாம் திரும்பிய இராணுவம் பலத்த ஷெல் தாக்குதலை மேற்கொண்டது. பொம்மர்கள், அவ்ரோக்கள், ஹெலியிலிருந்தும் கடும் தாக்குதல் நடைபெற்றது.

மேற்படி மோதலில் பெண் போராளிகள்தரப்பில் கப்டன் சுந்தரி [உருத்திரவதி உதயலட்சுமி, வல்வெட்டித்துறை). தனஜீவஞ (கணபதிப்பிள்ளை சாந்தன், மல்லாகம்), அனதி ஐயாத்துரை கிருஷ்ணலீலா, முல்லைத்தீவு). கேரஞ (ஜெகநாதன் ஜெகதீஸ்வரி, குச்சவெளி), ஜெலோவா, சுகந்தா,

(4-ம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு பகுதியில் 8 தமிழர் சுட்டுக் கொலை

[மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இருவேறு சம்பவங்களில் எட்டுத் தமிழர்கள் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை 5 மணிக்கு அக்கரைப்பற்று ஆலயடிவேம்பு என்னுமிடத்தில் 5 தமிழர்கள் அதிரடிப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## இந்து ஆலயங்களுக்கு நஷ்டஈடு கிடைக்கும்

[மானிப்பாய்]

வடக்கு கிழக்கு மாகாணத்தில் சேதமடைந்த இந்து ஆலயங்களுக்கு நட்டஈடு வழங்கப்பட உள்ளதாக இந்து சமய, கலாசார அமைச்சு அறிவித்துள்ளது.

இவ்வருடம் யூன் மாதத்திற்குப் பின், வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வன்செயலால் சேதமுற்ற இந்து ஆலயங்களின்சொத்துக்கள், சேதமதிப்பீடுகள் என்பவற்றை உதவி அரசாங்க அதிபர்கள் மூலம் உடன் திரட்டி அனுப்புமாறு இந்துசமய கலாசார அலுவல்கள் அமைச்சின் பணிப்பாளர் இம்மாவட்டங்களிலுள்ள சகல அரசாங்க அதிபர்களையும் கடிதமூலம் கோரியுள்ளார். (71)

## காங்கேசன் சிமெந்து ஆலை சுவிஸ்நிபுணர்களால்தெரிவு

(யாழ்ப்பாணம்]

இலங்கை அரசு தரப்பின் எதிர்ப்பை மீறி காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையை நவீன மயப்படுத்த சுவிஸ் நிபுணர்கள் குழு முடிவு செய்துள்ளது.

இலங்கையில் அமைந்திருக்கும் சிமெந்து தொழிற்சாலைகளை அபிவிருத்தி செய்வதற்கான வழிவகைகளை ஆராய இலங்கைவந்த சுவிஸ்சர்லாந்து

(2-ம் பக்கம் பார்க்க)

### 21 கோடி ரூபா நஷ்டம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை சிமெந்து ஆலை எட்டு மாதகாலமாக இயங்காமையால், இருபத்தொருகோடி அறுபது லட்சரூபா நஷ்டமேற்பட்டுள்ளது. சாதாரண உற்பத்தி மாதாந்தம் பத்தாயிரம் தொன்னாக இருந்தது குறிப்பிடத்தக்கது. [எஸ்)

## வள்ளங்கள் மீது தாக்குதல் பல அகதிகள் பலி

[முல்லைத்தீவு]

முல்லைத்தீவு கடல் பகுதியில் அகதிகள் சென்ற ஐந்து வள்ளங்கள்மீது போர் விமானங்கள் மேற்கொண்ட கடும்தாக்குதலில் பலர் கொல்லப்பட்டதாகத் தெரியவருகிறது.

நேற்றுக்காலை இச்சம்பவம் நடைபெற்றுள்ளதாக கூறப்படுகிறது. இத்தாக்குதலை பொம்மர், ஹெலிசள் நடத்தி

(4-ம் பக்கம் பார்க்க)

## மருத்துவ காப்புறுதி திட்டம்

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்கான மருத்துவ காப்புறுதித் திட்டம் அடுத்தாண்டு ஜனவரியில் அமுலாக்கப்படும். இத்திட்டத்தின்படி ஒவ்

(4ம் பக்கம் பார்க்க)

## ஈராக் ஆயுதங்கள் இலங்கை வந்தது

(கொழும்பு)

வளைகுடாவில்ஈராக் பெரும் நெருக்கடியைச் சந்தித்து வருகின்றபோதிலும் இலங்கைக்குப் பெருமளவு ஆயுதங்களையும் வழங்கியுள்ளது.

ஈராக்கின் இந்த உதவி குறித்து இலங்கை ஈராக்கிற்குக் கடமைப்பட்டுள்ளதாக கொழும்பு வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஈராக்

(4ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தாக்குதல் கைதேர்ந்த அதிரடி

(கொழும்பு)

திருமலை பன்மதவாச்சியில் நேற்றுமுன்தினம்இடம்பெற்ற புலிகளின் அதிரடித்தாக்குதல் மிகவும் கைதேர்ந்த முறையில் துல்லியமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என 'ஏ. எவ். பி.' செய்தி ஸ்தாபனம் வர்ணித்துள்ளது.

(2-ம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தீர்வு இங்கு சாத்தியமில்லை

(கொழும்பு)

இலங்கையில் இராணுவத் தீர்வு முயற்சி நீண்டகாலத்தை எடுக்கும். இது சாத்தியப்படாத ஒரு முயற்சி என கொழும்பிலுள்ள மேற்கு நாட்டு இராஜதந்திரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இராணுவம் நுழைந்த தமிழர் பிரதேசங்களில் புலிகளின் கெரில்லா யுத்தத்திற்கு சாத்தியமான சூழ்நிலை ஏற்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கிழக்கில் இராணுவ கெடுபிடி அதிகரித்திருப்பதால் புலிகளுக்கு அப்பகுதியில் அமோக ஆதரவு கிடைத்துவருவதாகவும் 'ஏசியா வீக்' குறிப்பிட்டுள்ளது. (சி]

## தமிழ் பகுதித் திட்டம் தெற்கே இடமாற்றம்

(திருமலை)

திருகோணமலை தமிழ் மண்ணில் நிறுவப்படவிருந்த 'நிலக்கரி எரி பொருள் ஆலை' அப்பகுதியிலிருந்து 'திக்வெல' என்ற சிங்கள பிரதேசம் ஒன்றுக்கு இடம்மாற்றப்பட்டுள்ளது.

பிரான்ஸ் உதவியுடன் இந்த ஆலை அமைப்பதற்கு நிபுணர்களால் 1987-ல் திரு

(4-ம் பக்கம் பார்க்க)

## ஹெலி சூடு பெண் பலி

[புலோலி)

கொடிகாமம் சந்தைப் பகுதியில் நேற்றுக்காலை 8 மணியளவில் ஹெலி தாக்குதல்

(2-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நத்தார், புது வருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம், (வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு) ''மண்டேலா ரேடர்'' இல. 256, பருத்தித்துறை வீதி, நல்லூர்; ''அரஸ் ஜவுளியகம்'' 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (சி-4158)

### வேலையாட்கள் தேவை

திருநெல்வேலி சந்தியிலுள்ள மணிக்கூடு திருத்தும் நிறுவனத்துக்கு மணிக்கூடு திருத்துவதில் அனுபவமிக்கவர்கள் தேவை. நேரில்வரவும். டயா எலெக்ரோனிக் கொம்பிளக்ஸ், 6, பலாலி வீதி. திருநெல்வேலிச் சந்தி. (சி 4191)

### சேவை

தமிழ், ஆங்கில தட்டச்சு, ரோனியோ வேலைகள், தமிழ். ஆங்கில தட்டச்சு பயிற்சி வகுப்புக்கள். தமிழ், ஆங்கில, சிங்கள மொழி பெயர்ப்பு. வாசகப் பிரியர்களுக்கு வாடகைப் புத்தகங்கள். அழகுக்கு உயிரூட்டும் தலைச்சோடனை. நீதினி - Q ''கபிரியேல் பில்டிங்'' பஸ் நிலையம் முன்பாக சுன்னாகம். (எ-937)

### புதுமுறை பரிசில்கள்

பழைமை மாற்றி புதுமை பேணுங்கள் நண்பர்கள் உறவினருக்குவாழ்த்துக்கூற அரிய பரிசில்களாக அன்பளிப்பு செய்ய ''நான்'' வெளியீடுகளைபயன்படுத்துங்கள் ''நான்'' வெளியீடுகளை புத்தக நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம். (சி 4182)

### வகுப்புக்கள்

Spoken English O/L விஞ்ஞானம் வகுப்புக்கள் மற்றும் எல்லா வகுப்புக்களுக்குமான சகல பாடங்களும் நடைபெறுகின்றன. Jsoo Chang Institute அராலி வடக்கு, வட்டுக்கோட்டை. (சி-4185)

# திறமை அடிப்படையில் வங்கி நியமனங்கள்

(கொழும்பு)

வங்கிகளின் வெற்றிடங்களுக்கு ஆள்திரட்டும்போது அரசியல் தலையீடுகளுக்கு ஒரு போதும் இடமளிக்கப்படமாட்டாது. திறமை, மாவட்ட ஒதுக்கீடு ஆகியவற்றின் அடிப்படையில்தான் தெரிவுசெய்யப்படுவர்.

இத்தகவலை கொள்கை திட்டமிடல் ராஜாங்க அமைச்சர் விமல் விக்கிரமசூரியா பாராளுமன்றத்தில் தெரிவித்தார். அவர்மேலும் பேசுகையில்; சகல நியமனங்களும் இனவிகிதாசார அடிப்படையிலும் திறமை அடிப்படையிலும் நடைபெறுமென உறுதியளித்தார்.

# சிற்றூரவையிலுள்ள ஆசிரியர்கள் பாடசாலை நேரங்களில் வெளியில் செல்லக்கூடாது

[உடுவில்]

பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள் யாராவது சிற்றூரவை, வட்டவைகளில் உறுப்பினர்களாக இருப்பின் அவர்கள் பாடசாலையை விட்டு வெளியேறி மேற்படி சபைகள் சம்பந்தப்பட்ட விடயங்களில் ஈடுபடக்கூடாது என்று தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க அரசியல் பிரிவு பொறுப்பாளர் திரு. அருண் மாஸ்டர் தெரிவித்துள்ளார்.

பாடசாலை தவிர்ந்த நேரங்களிலேயே அவர்கள் இவ்விடயங்களில் ஈடுபடவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பாடசாலை சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் ஏதும் இருப்பின் அதிபர்கள் எமது இயக்கத்தின் பாடசாலை சம்பந்தமான கல்விப்பிரிவுக்கும், மாணவர் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளை மாணவர் அமைப்புக்கும் எழுத்துமூலமாக அறிவித்தால் நாம் அவற்றை கவனித்து விசாரணை செய்வோம் என்றும் அவர் தெரிவித்தார். (109)

### தவறிவிட்டது

க. சபாநாயகம் ஆகிய எனது சிறிபகைப்பை. இரண்டு வங்கிப் புத்தகம் இரண்டு பாஸ்போட் இன்னும் விலை பொருட்களுடன் சனிக்கிழமை இரவு (15.12 90) பூநகரியில் இருந்து வவுனியா பிரயாணம் செய்யும் வழியில் தவறிவிட்டது. இதனை கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பூநகரியில் அன்ரிமலேரியா ஓவசியர் தேவராஜாவிடம் மட்டுவில நாடு கிழக்கு பூநகரி எனும் விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (சி 4193)

### பாலாஜி புத்தகசாலை

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா போதனைகள் 10 ரூபா, சாயிபாபா [லெமனட்] படம் 9 ரூபா. தபாலில் 12 ரூபா முத்திரைகள் அனுப்பிப்பெறலாம். ஈழத்து எழுத்தாளர்களின் நூல்கள், பாடசாலைப் புத்தகங்கள் விற்பனையாகின்றன. 15/6, முதலாம் ஒழுங்கை, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். (சி41ɤ2)

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

### பதவி உறுதிப்படுத்தும் கடிதங்கள்

(மானிப்பாய்)

வடபகுதியில் பணிபுரியும் சுமார் 40 கிராமசேவையாளர்களுக்கு அவர்களது பதவியை உறுதிப்படுத்தும் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது. (71)

### திருவெம்பாவை பாடல் மனனப் போட்டி

[பண்டத்தரிப்பு)

பண்ணாகம் இந்து சமய விருத்திச் சங்கம் திருவெம்பாவை உற்சவத்தை முன்னிட்டு திருவெம்பாவை பாடல் மனன ; போட்டியொன்றை இம்மாதம் 30-ம் திகதிஞாயிற்றுக்கிழமையன்று நடாத்தவுள்ளது

கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு, மத்தியபிரிவு என்றுமூன்று பிரிவுகளாக இப்போட்டி நடாத்தப்படும் என்றும் இப்போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் பாடாசாலை மாணவர்கள் தங்களின் விண்ணப்பங்களை சங்க செயலாளருக்கு அனுப்பி வைக்கலாம் என்றும் பண்ணாகம் விசவர்த்தனை முருகமூர்த்தி கோவில் அன்னதான மண்டபதில் இப்போட்டி நடைபெறும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (72)


## மெர்கன்டைல் கிறெடிற் லிமிட்டெட்

எமது வாடிக்கையாளர்களுக்கு வட்டிப்பணம் கொடுத்தல் போன்ற அலுவல்களைத் தொடர்ந்து நடாத்துவதற்குப் போதுமான அளவு பணம் வங்கியிலிருந்து பெறமுடியாமையினாலும் தலைமை அலுவலகத்துடன் தபால் தொடர்பு சீராக இல்லாமையாலும், கொழும்பில் இருந்து பணம் கொண்டுவருவதற்கு எமக்குத் தகுந்த பாதுகாப்பு இல்லாமையாலும் எமது அலுவல்களைத் தொடர்ந்து நடாத்த முடியாமல் இருப்பதனை மிகவும் கவலையுடன் அறியத்தருகிறோம். மீண்டும் எமது கிளை அலுவலகம் திறக்கும் திகதி பற்றிய விபரம் பத்திரிகை வாயிலாக அறிவிப்போம். அதுவரை எம்முடன் ஒத்துழைக்குமாறு எமது வாடிக்கையாளர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

கிளை முகாமையாளர்.
(MERCANTILE CREDIT LIMITED)
11/8, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்,
15-12-90. (ஏ 933)


### புத்தக வங்கிக்கடன்

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பாடசாலை புத்தகங்கள் வாங்குவதற்கு வங்கிக்கடன் அடுத்தாண்டு முதல் திணைக்களங்களால்வழங்கப்படும். (எஸ்)

### வாழை நார் பயிற்சி

(கொழும்புத்துறை)

யாழ் செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன். நல்லூர் முருகன் சனசமூக நிலைய நிர்வாகிகளின் ஆதரவில நிலையத்தின் 34 மாணவர்கள் வாழை நாரில் அலங்காரப் பொருள் செய்யும் பயிற்சியினைப் பெற்றுத் தேர்ச்சி அடைந்துள்ளனர் (154

### பாடசாலை இடமாற்றம்

(உடுவில்,

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி தற்போது மருதனாமடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்று வருகின்றது.

வீமன்காமம மகாவித்தியாலயம், உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயத்தில் பிற்பகல் 2மணியில் இருந்து நடைபெற்றுவருகின்றது.

### ஹெலி சூடு

(1-ம பக்கத் தொடர்ச்சி)

நடத்தியதில் ஒரு பெண் பலியானார். இருவர் படுகாயம் அடைந்தனர்.

நேற்றைய தினம் கொடிகாமம் சந்தைநாளாகையால் அங்கு பெருமளவு மக்கள் கூடியிருந்தபோதே இத்தாக்குதல் நடைபெற்றது.

இச்சம்பவத்தில் பலியானவர் பருத்தித்துறையைச் சேர்ந்தவர் எனக் கூறப்படுகிறது. (61-135)

### புலிகளின் தாக்குதல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஐந்து வாகனங்களைக் கொண்ட தொடரணியில் முதல் இரு ட்ரக்குகளையும் விட்டு மூன்றுவதாக வந்த ஜீப்பை குறி தவறாது கண்ணிவெடியில் சிக்கவைத்து உயர் அதிகாரிகளை புலிகள் வீழ்த்தியதாகவும் ஏ. எப். பி. தெரிவித்துள்ளது.

இதேவேளை இத்தாக்குதலில கொல்லப்பட்ட பிரிகேடியர் லக்ஷமன் வீரரத்னவுக்கு மேஜர் ஜெனரல் பதவி வழங்கப்பட்டுள்ளதாக அரக அறிவித்துள்ளது. (சி)

### காங்கேசன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிபுணர்கள்குழு கூட்டுத்தாபன அதிகாரிகளின் சிபார்சுகளையும் மீறி காங்கேசன் சிமெந்து ஆலையை நவீனமயப்படுத்துவதேதங்கள்முடிவு என அறிவித்துள்ளது

கூட்டுத்தாபன அதிகாரிகள் புத்தளம் சிமெந்து ஆலையை நவீனமயப்படுத்த நிபுணர்களின்சிபார்சுக்கு சமர்ப்பித்த அறிக்கை நிராகரிக்கப்பட்டு, வடபகுதியில் சிமெந்து உற்பத்திக்கான வளங்கள் அதிகமாக இருப்பதாகவும் அதற்கான திட்டத்தை தயாரித்து உதவுமாறும் வடபகுதி சிமெந்து கூட்டுத்தாபன அதிகாரிகளை கோரியுள்ளனர்.

தயாரிக்கப்படும் இத்திட்டம், இப்பகுதிகளின் சுற்றுப்புறச் சூழலை மாசுபடுத்தாத வகையில் அமையவேண்டும் எனவும், பெருந்தொகையான நிதியை இத்திட்டத்திற்கு மூலதனமிடுவதற்கு வசதியாகத் திட்டங்களை ஒருமுகப்படுத்துமாறும்கோரியுள்ளனர்.

சுவிஸ் நிபுணர்கள் குழுவுக்குத் தமிழ் மக்களின் நியாயமான போராட்டம் தெரிவித்திருந்தமையால் பாரிய உதவி எமக்குக் கிடைத்திருப்பதாகச் சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது. [எஸ்)

### பயிற்சி நெறிகள்

(யாழ்ப்பாணம்)

முறைசாரக்கல்வி தொழிற்திறன் அபிவிருத்தித் திட்டதின் கீழ் தொலைக்காட்சி தொழில் நுட்பம், இலத்திரனியல பயிற்சி வகுப்புக்கள் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்ற வானொலி பேணல் ஆகிய பயிற்சிநெறிகள் யாழ். இந்துக்கல்லூரியில் தற்பொழுதுநடைபெற்று வருகின்றன. (153)

### சைவசமய பரீட்சை

(வட்டுக்கோட்டை)

காரைநகர் மணிவாசகர் சபையினரால் ஆண்டுதோறும் நடாத்தப்படும் ''அகில காரைநகர் சைவசமயப் பரீட்சை'' எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெறவுள்ளது.

காரைநகரில் உள்ள பாடசாலை அதிபர்கள் தங்கள் பாடசாலை விண்ணப்பங்களை இன்று பரீட்சைச் செயலாளர் திரு. க. தில்லைபம்பலத்திடம் ஒப்படைக்குமபடி கேட்கப்படுகிறார்கள். (139)

## இராசி பலன்

20-12-1990
வியாழக்கிழமை

திதியை பி. ப 3-59 வரை.
உத்தராடம் பி. ப. 2-51 வரை
இராகுகாலம் பகல் 1-54 முதல் 3-24 வரை.
சித்தயோகம்
நல்ல நேரம் காலை 7-54 முதல் 9-24 வரை.

மேஷம்: காரிய வெற்றி. பெரியோர் ஆசி புதிய தொடர்பு. குடும்ப மகிழ்ச்சி. சகோதரர் உதவி

இடபம்: எதிர்பாராத தொல்லை ஏமாற்றம். கடன்பளு. குடும்பத்தில் குழப்பம். யோசனை மிகுதி.

மிதுனம்: படபடப்பு. குடும்ப சச்சரவு. இனசன விரோதம். தொழில் பாதிப்பு. மனப்போராட்டம்.

கடகம்: காரியபலிதம். பயணங்களால் நன்மை. தொழில் லாபம். பணவரவு.

சிங்கம்: மனதில் மகிழ்ச்சி. தொழில் மாற்றம். சகோதரரால் விரோதம். குடும்பத்தில் சுபகாரியம்.

கன்னி: மனதில் போராட்டம் அந்நியர் தொல்லை. தொழில் குறைவு. குறைகேட்டல். குடும்பபிரிவு.

துலாம்: கடித தொல்லை. சொத்து தகராறு. பணக்கஷ்டம். இனசன வருகை. ஆலய தரிசனம்.

விருச்சிகம்: அறிஞர் சந்திப்பு. அபிப்பிராயபேதம் குடும்பத்தில் மகிழ்ச்சி. நண்பர்கள் உதவி.

தனுசு: போட்டி மனப்பான்மை தாய்வழி நினைவு; தியான சிந்தை,

மகரம்; புதிய சிந்தனை. ஏமாற்ற உணர்வு. தொழில் லாபம். குடும்ப கௌரவம், புகழ்.

கும்பம்: எதிர்பாராத முடிவு குடும்ப சச்சரவு. தொழில் பிணக்கு. மகளிர் உதவி.

மீனம்: பெரியோர் உதவி. தொழில் குறைவு. வாகன சுகம் புத்திரர் மகிழ்ச்சி. அகால போஜனம்.

ஜோஸ்யர்.

## சகுனிமாமா திட்டங்கள்!

தமிழினத்தின் பூர்வீக பிரதேசங்களையும், நிர்வாக பிரிவுகளையும், சிங்களமயமாக்கும் திட்டம் கிழக்கிலங்கையில் அதி தீவிரமாக அமுல் செய்யப்பட்டு வருகிறது.

வளமான, வயல் பிரதேசங்களுடன் கடற் பிராந்தியங்களை இணைத்து குடியேற்றங்களையும் தொழில் வளங்களையும் உருவாக்கி அதிகாரப் பரவலாக்கல் என்ற 'தங்க முலாம் பூசி' சிங்கள மயமாக்கத்துக்கு, அரசு புதிய உத்வேகம் அளித்து வருகிறது!

திருமலை, கடற்கரையோரங்கள், புல்மோட்டை முல்லைத்தீவு, மன்னார், கடற் பிராந்தியங்களை ஒட்டி மீன்பிடித் தொழில் விருத்தி என்ற போர்வையில் சிங்கள குடியேற்றங்களை விஸ்தரிக்கும் முஸ்தீபுகள் நடந்து வருகின்றன.

இதன் முதற்கட்டமாக கொழும்பில் இயங்கி வந்த கடற்றொழில் அமைச்சுத் தலைமையகம் திருமலைக்கு திடுதிப்பென்று மாற்றப்பட்டுள்ளது.

திருமலை கடற்கரையோரங்களில் சிங்கள மீனவர்களை இனம் பெருக்கி தமது எண்ணக் கனவை நிறைவேற்ற, முதலில் கடற்றொழில் அமைச்சு தலைமையகமும், அடுத்து சிங்கள அலுவலர்கள் குடும்பங்களும் அதனைத் தொடர்ந்து தொழிலாளர்களும் அணி அணியாக குடியேற்றும் திட்டம் சடேறிவருகிறது.

இதேவேளையில் அதிகாரப் பரவலாக்கல் என்று கூறிக்கொண்டு மறுபுறத்தில் திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் தொகையை அதிகரித்து சிங்கள மக்களின் நலன் பேணும் பிரத்தியேக வழிவகையும், காணப்பட்டுள்ளது.

உதவி அரசாங்க அதிபர்பிரிவுகள் திருமலையில் 10, — 12 ஆகவும்மட்டக்களப்பில் 10,—15 ஆகவும் அம்பாறையில் 16, — 19 ஆகவும் அதிகரிக்கப்பட்டுள்ளதன் மர்மம் சிங்கள மயமாக்கவே அன்றி வேறு எதுவுமில்லை.

தம் இனத்தின் சனத்தொகையை பெருக்கல் தொழில் வளம் காட்டல், அரசியல் அதிகார ஒதுக்கீடு ஆகிய அனைத்து வழிகளின் மூலம், கிழக்கிலங்கை முழுவதிலும் சிங்களவரின் ஆதிக்கம் மேலோங்கச் செய்யும் சதித்திட்டம் ஒடிப்பரவுகிறது!


கிழக்கிலங்கையில் ஆயுதபலத்தால் சாதிக்க முடியாத சதித்திட்டங்களை ஆட்சி அதிகாரப் பரவலாக்கல் மூலம் நிறைவேற்றத் துடிக்கும் அரசின் "சகுனிமாமா" திட்டங்களாக இவை சந்தேகிக்கப்படுகின்றன!

— மயூரன்

# 'யேசுவுக்கு மாத்திரமல்ல எம்மவர்க்கெல்லாம் நேசன்!'

தமிழ்மணம் பரப்பும் ஈழ நாட்டிலே புகழ் மணம் வீசி, நாளை வெள்ளிவிழாக் காணுகிறார் அருட் தந்தை யேசுநேசன் அடிகளார்.

பெயருக்குப் பொருத்தமாக யேசுவுக்குப் மாத்திரமல்ல எம்மவர்க்கெல்லாம் நேசன்; திருமறையின் மதிப்பிடற்கரிய



இவர் கண்டி தேசிய

சொத்து. இவ்வித்து கருவாகி, உருவாகி 1939-ம் வருடம் புரட்டாசித் திங்கள் 19ம் திகதி குழந்தை வடிவில் உதித்தது.

தனது ஆரம்பக் கல்வியை புலோலி புனித வளனார்பாடசாலையில் முடித்து 1949ம் வருடம் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியில மாணவனாக இணைந்தார் அக்கால சிரேஷ்ட பாடசாலைப் பத்திரப பரீட்சைவரை கற்றார், சிறந்த உதைபந்தாட்டக் காரனாகவும் இடம்பெற்றார். எத்தனைபுகழ் பதவி, சீர்வரிசை வந்தாலும், அவற்றை துச்சமென துறந்து துறவம் பூண துணிவுகொண்டார். "ஏழைகட்கு நற்செய்தி நவில என்னை அனுப்பினர்." என்னும் விருது வாக்கைக் கன்னிக் கருத்தாகக்கொண்ட அமலமரித் தியாகிகள் துறவற சபையில் 1953ம் வருடம் நவசந்நியாசத்தை ஆரம்பித்து என்றும் கன்னியானவரும், சிலுவை மரணம் மட்டும் பணிந்தவரும் ஏழ்மை நிலை கொண்டவருமான யேசுவின் அடிச்சுவட்டை நெருங்கி பின் செல்ல 1962ல் நிரந்தர அர்ப்பணத்தை ஏற்றுக் கொண்டார். 1965ம் வருடம் மார்கழித் திங்கள் 21ம் நாள் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

சிறந்த தியான மறையுரையாளரான இவர் மரியன்னையில் நிறைந்த அன்பு கொண்டவர் தந்தையை இளைஞராக இருந்தபோது இழந்த இவர் தாயின் அன்பில் வழிகாட்டலில்நீண்ட காலம் வாழும் வாய்ப்புப் பெற்றிருந்ததும் இதற்கு ஓர் காரணமாகலாம். பெற்றோரைப் பெருமையுடன் நினைவுகொள்வார்.

இவர் கண்டி தேசிய குருமடத்தில் ஆசிரியராகவும் பணிபுரிந்தார். நமது நாட்டில் பெற்ற அனுபவஅறிவுடன் இந்தியநாட்டில் வறுமைக்கோட்டின் கீழ் மட்டத்தில் அநாதைகளாக்கப்பட்ட சிறுவர்களைப் பராமரிக்கும் இல்லத்தை நிர்வகிக்க அனுப்பப்பட்டார். அவர்களுக்கு அன்னையாக தந்தையாக இருந்து இரு நல்ஆண்டுகள் பணிபுரிந்தார். உயர்கல்வியும் அனுபவமும் பெற கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு சபையினரால் அனுப்பப்பட்டார்.

அனுபவமும் ஆற்றல் மிக்க இவரை 1980ம் வருடம் உப அதிபராகப் பெறும்வாய்ப்பை புனித பத்திரிசியார் கல்லூரி பெற்றது கடந்த பத்து வருடங்களாக அதிபரின் வலது கரமாக இருந்து பல்வேறு பணிகளை புரிகிறார்.

அருட்தந்தை யேசுநேசன் அவர்களை இறைவன் தமது பணிக் குருத்துவத்துக்குத் தெரிந்து கால்நூற்றாண்டு வழி நடத்தி வேண்டிய வரங்கள் அளித்துக் காத்துள்ளார் ஆகவே அந்த நல்ல இறைவனுக்கு நன்றிகூறும் விழாவாகும் இது. அவர்வழி நாமும் கல்லூரியும் நன்மைகள் பல பெற்றுள்ளோம் அவருக்குநாம் நன்றி கூறும் நல்நாளுமாகும்.

குருவாகிய அருட்தந்தை அவர்களுடன் கடந்த அரை நூற்றாண்டுகளுக் குட்பட்ட அவர் வாழ்க்கையையும் கால் நூற்றாண்டு பணி வாழ்வையும் பின் நோக்கி பார்த்த நாம் அவரை வாழ்த்துவோம்: போற்றுவோம்.

வெள்ளி விழா நாயகரை இறை பணியில் பொன் விழா, வைரவிழாக்காணும் பேறடையவும் உடல் நலமும் அருள் வளமும்பெற்று அப்பணியில் சிறப்படையவும இறைஅருள் வேண்டி நிற்போம்.

## செல்வி எம். எம். சின்னப்பு

## புயலுக்கு 25 பேர் பலி

(டாக்கா)

தென்பங்களாதேஷ் பகுதியில் வீசிய புயலினால் இருபத்தைந்துபேர் மரணமாகியுள்ளனர். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர். கடலலைகள் இருபது கிராமங்களில் புகுந்துள்ளதால் 30,000பேர் வீடுகளை இழந்துள்ளனர். மீட்புவேலைகள் தீவிரமாக நடைபெற்றுவருகின்றன.

(எஸ்)

## பாடசாலை இயங்குகிறது

(வட்டுக்கோட்டை)

காரைநகரில் அண்மையில் ஏற்பட்ட அசம்பாவிதங்களைத் தொடர்ந்து முப்படையினரதும் ஷெல், பீரங்கி, குண்டுத் தாக்குதல்களால் பாதிக்கப்பட்டு இயங்காதிருந்த தோப்புக்காடு மறைஞான சம்பந்த வித்தியாசாலை தற்போது வட்டு பிளவத்தை அ.மி.த.க. பாடசாலையில் இயங்கி வருகின்றது. (139)

## தமிழீழத்தில் "நிர்வாகம் சீராக இயங்கவேண்டும்"

(கிளிநொச்சி)

கிளிநொச்சி குருகுலம் தமிழீழத்தில் அமைந்துள்ள முக்கியமான சமய சமூக சேவை நிறுவனமாகும் என்று கிளிநொச்சி குருகுலத்தில் நடந்த கூட்டத்தில் பேசிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மாவட்ட அரச திணைக்கள இணைப்பாளரான திரு. சிவ மாஸ்டர் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் இந்த நிறுவனத்தை நடாத்துவதில் உள்ள சிரமங்களைக் குறைப்பதிலும் முன்னேற்றுவதிலும் நாம் உதவத் தயாராக உள்ளோம் என்றும் எந்த நிர்வாகமும் தமிழீழத்தில் சீராகவும் சிறப்பாகவும் நடைபெறவேண்டும் என்றும் கூறினார்.

## தமிழரின் வரலாற்றை மாணவர் அறியவேண்டும்

(அச்சுவேலி)

"தமிழர்களின் உண்மையான வரலாற்றையும், சமகாலம் போராட்டம்தொடர்பான நிகழ்வுகளையும் மாணவர்கள் தெளிவாக அறிந்திருக்கவேண்டும். அதைக் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் தயங்கக்கூடாது.

இவ்வாறு மருதனுமடம் கோட்டக் கல்வி அலுவலகக் கல்வி அதிகாரி திரு. என். கணேசபிள்ளை கூறினர்.

அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற ஆசிரியர்கள் கூட்டத்தில் திரு. கணேசபிள்ளை தொடர்ந்து உரையாற்றும்போது போர்க்காலச் சூழ்நிலையால் மாணவர்களின் கல்விநிலை பாதிக்கக்கூடாது: அதற்கான பாட ஏற்பாடுகளை பாடசாலை ஆசிரியர்கள் திட்டமிட்டு ஏற்பாடு செய்யவேண்டும்.

அண்மைக்கால சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட பாடத்திட்டத்தை குறுகிய காலத்தில் ஈடுசெய்யவேண்டும்.

## சாவகச்சேரியில் அஞ்சலிக் கூட்டம்

(நாவற்குழி)

மாங்குளம் இராணுவ முகாம் தகர்ப்பின் வெற்றி நாளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள 22ம் திகதி பிற்பகல் 6 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரி மைதானத்தில் மாபெரும் அஞ்சலிக்கூட்டம் நடைபெறவுள்ளது.

தமிழீழ தாயகமீட்பில் எமது எழுச்சியைக் காட்டவீதிகள், சந்திகள்தோறும் அலங்கரிக்கப்படவேண்டுமென தென்மராட்சி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது. (107)

## 64 மாணர்கள் தகுதி பெற்றனர்

(பருத்தித்துறை)

அண்மையில் வெளியான க. பொ. த. (உயர்தர) பரீட்சையின் வெட்டுப் புள்ளி அட்டவணைபின்படி பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் இருந்து பல்கலைக் கழகத்திற்குச் செல்ல 64 மாணவர்கள் தகுதி பெற்றுள்ளனர். (52)

## சுய தொழிலில் 5000 ரூபா கடன்

(கொழும்பு)

மக்கள் வங்கி, சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட்டவர்களுக்கு ஐயாயிரம் ரூபாவைக் கடனாக வழங்கவுள்ளது.

(எஸ்)

## பலதும் பத்தும்

### ராமராவுக்கு ஒரு கோயில்!!

கிராமப்புற மக்களுக்கும் நகர்ப்புற மக்களுக்கும் இடையில் ரசனையில் வித்தியாசமுண்டு அறிவு வளர்ச்சியில் பின்தங்கியிருக்கின்றார்கள். இதற்கோர் உதாரணம்.

ஆந்திராவில் பனம்புரா என்ற கிராமத்தில் முன்னர் திரைப்படங்களில் நடித்த எம். டி ராமராவுக்கு ஒரு கோயில் கட்டப்பட்டிருக்கிறது. அவர் நிறைய கிருஷ்ணன் ராமர் வேடங்களில் நடித்துப் பாராட்டப்பட்டதால் அவரை தெய்வமாக கருதி இந்கோயில் கட்டப்பட்டுள்ளது. இக்கோயிலுக்கு தினமும் நான்கு சாமமும் பூஜை நடைபெறுகிறது. அண்மையில் இவ் ஆலயத்தில் வழிபாட்டிற்காக ஐந்து லட்சம் பக்தர்கள் கூடியுள்ளார்கள்.

- ஞானி

# சிமெந்து ஆலை இயங்க பாதுகாப்பு தேவை

(யாழ்ப்பாணம்)

''காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலையும், லங்கா சிமெந்துத் தொழிற்சாலையும் மீண்டும் இயங்கவேண்டுமானால், இங்கு பணி புரியும் சகல ஊழியர்களினதும் பாதுகாப்புக்கு அரசாங்கம் உத்தரவாதம் அளிக்கவேண்டும். அத்துடன் சிமெந்து ஆலை இயங்குவதற்கான நீர் மின்சார வசதியும், போக்குவரத்துக்கு வாகனவசதியும் வழங்கப்படவேண்டும். அப்போது தான் சிமெந்து ஆலை பூரணமாகச் செயற்பட ஒத்துழைப்பு நல்குவர்.''

இவ்வாறு, காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை நிர்வாக முகாமையாளர் திரு. எஸ். ஞானபண்டிதன் யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலையின் தற்காலிகத் தலைமையகத்தில் 'ஈழநாடு'வுக்கு அளித்த பேட்டியின்போது தெரிவித்தார்.

அவர் தமது பேட்டியில்; சிமெந்துத் தொழிற்சாலை ஊழியர்களுக்கு டிசம்பர் மாதம் வரை முழுச்சம்பளமும் வழங்கப்பட்டுள்ளது. சுமார் 2,500 ஊழியர்கள் தமக்குரிய மாதாந்தக் கொடுப்பனவைப் பெற்றிருக்கின்றனர்.

கடந்த ஆறு மாத காலத்தில் ஓய்வுபெற்ற பதினைந்து ஊழியர்களுக்குச் சேவைக்காலக் கொடுப்பனவுகளில் இருபத்தைந்து வீதத் தொகை வழங்கப்பட்டுள்ளது. மரணமான ஊழியர்களுக்கு மரணச் செலவுக்கான தொகை வழங்கப்பட்டுள்ளது. அவர்களுக்கான நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவும் வழங்கப்படும் என்றார். (எஸ்)

## விபத்தில் இளைஞர் பலி

(யாழ்ப்பாணம்)

வயலில் உள்ள குளம் ஒன்றில் நண்பர்களுடன் குளிக்கச் சென்ற கட்டப்பிராய் சின்னக்கோவிலடியைச் சேர்ந்த ஐயாத்துரை ராமேஸ்வரன் (வயது 19) என்ற இளைஞர் குளத்திலுள்ள பாருங்கல் ஒன்றுடன் மோதுண்டதில் அடிவயிற்றில் படுகாயமடைந்து மரணமான சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றது. (வி)

## சைக்கிள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சந்தைக்கு முன்பாகத் தனது சைக்கிளை பூட்டாமல்விட்டுக் கடைக்குச் சென்றவரது சைக்கிளை ஒருவர் திருடிச் சென்ற சம்பவம் நேற்றுக் காலை திருநெல்வேலியில் நிகழ்ந்தது.

சைக்கிளைப் பறிகொடுத்தவர், சைக்கிள் திருடனைத் தொடர்ந்து துரத்திச் சென்றும் திருடன் அகப்படாமல் தப்பிக்கொண்டான். [எஸ்]

# கிழக்கில் தமிழரை கொல்வது யார்?

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் தமிழரை இராணுவம் கொல்வதாக முஸ்லிம் அரசியல்வாதிகளும், முஸ்லிம் ஊர்காவற்படைகளே தமிழரைக் கொல்லுகிறது இராணுவ தரப்பும் பரஸ்பரம் குற்றம் சாட்டியுள்ளன.

இத்தகவலை நவம்பர் 16 'ஏசியா வீக்' சஞ்சிகை தெரிவித்துள்ளது. மேலும் இப்பகுதியில் ஊர்காவற்படையினர், மத அடிப்டையிலேயே தெரிவு செய்யப்படுவதாகவும் தெரிவித்துள்ளது.

அரசுக்குச் சார்பான தமிழ்க் குழுக்களும் முஸ்லிம் மத அடிப்படைவாதிகளும் பெருமளவில் ஊர்காவற்படையில் சேர்த்துக்கொள்ளப்படுவதால் தமிழ் மக்கள் அச்சமடைவதாகவும் அச்சஞ்சிகை தெரிவிக்கிறது. (சி)

# அகதி முகாம்களில் போராளிகள் கைது

(சென்னை)

தமிழகத்தில் அகதி முகாம்களிலிருந்தும் தமிழ் போராளிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.

மதுரையில் பெரியார்நகர், உச்சப்பட்டி, கூடல் நகர் அகதி முகாம்களிலிருந்து நேற்று 18 தமிழ் போராளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். புதுக்கோட்டை மாவட்டத்தில் நேற்று முன்தினம் 12 போராளிகள் கைது செய்யப்பட்டனராம்.

கடந்த ஒருவாரத்தில் தமிழகத்தில் சுமார் 200 தமிழ் போராளிகள் கைது செய்யப்பட்டதாகவும் அரசுக் குறிப்பு தெரிவித்துள்ளது. (சி)

## வவுனியாவில்— பத்து வீடுகள் இடித்து தரைமட்டம்

[புலோலி]

வவுனியா மதகுவைத்த குளத்திலுள்ள தமிழர்களின் பல வீடுகள் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.

வவுனியா பஸ் டிப்போவுக்கருகிலுள்ள இராணுவ சென்றிக்காக எல்லைப்புறக் கிராமமான மதகுவைத்த குளத்தில் உள்ள வீடுகள் இடித்து உடைத்துத் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.

இங்கு வாழ்ந்த தமிழ் மக்கள் ஏற்கனவே இடம்பெயர்ந்துள்ளனர். (61)

## தொண்டர் ஆசிரியர்— நேர்முகப் பரீட்சை இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கு நடைபெற்று வருகின்ற நேர்முகப்பரீட்சைகள் யாவும் இன்று முதல் மறுஅறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது என்று யாழ். கல்விப்பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சிலிருந்து நேற்று யாழ். கல்வி பணிப்பாளருக்கு வந்த வானொலிச்செய்தியைத் தொடர்ந்து இந்த நேர்முகப்பரீட்சைகள் யாவும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வடமராட்சி கல்விக்கோட்டத்தைச்சேர்ந்த 30 தொண்டர் ஆசிரியர்களுக்கு நேர்முகப்பரீட்சை நேற்றுக்காலையும், யாழ். கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த 30 தொண்டர் ஆசிரியர்களுக்கு நேற்று மாலையும் நேர்முகப் பரீட்சை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. [153]

## ஈராக் ஆயுதங்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கின் உதவிகள் பல இலங்கைக்கு வந்துசேர்ந்துள்ளது.

இதேவேளை வெளிநாடுகளிலிருந்து பெற்ற பல நவீன ரக இராணுவத் தளபாடங்களை ஈராக்கிற்கு இலங்கை அனுப்பிவைத்ததாகவும் ஏஜென்ஸி செய்தி ஒன்று தெரிவித்துள்ளது. (சி)

## கலைமாணி வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கலைமாணி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

1991 ஜனவரி 5ம் திகதி இதற்கான வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளது. சேர விரும்பும் மாணவர்கள் விண்ணப்பங்களை நேரில் சமர்ப்பிக்கலாமென அதிபர் தெரிவித்துள்ளார்.

## தொடர்ந்து ஷெல் தாக்குதல்

(பூநகரி)

மாங்குளம் இராணுவ முகாம் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து தொடர்ச்சியாக இரவு பகல் ஆட்லறி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்படுகிறது.

இதனால் பரந்தன், கிளிநொச்சி மக்கள் பெரும் இன்னலுக்குள்ளாகி வருகிறார்கள். அதோடு கிளிநொச்சி பகுதியையும் ஆனையிறவு பகுதியையும் ஹெலி, சீபிளேன் தொடர்சியாக வட்டமிட்டுவருகின்றன.

மேலும் கிளிநொச்சிப் பகுதியில் கடந்த சில நாட்களாக ஹெலி தாக்கி வருகின்றது. இதனால் மக்கள் பலர் காயமடைந்துள்ளனர்.

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி. 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு மார்கழி மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/180306/81.

# மயானம் சென்றோர் மீது பீரங்கி தாக்குதல்

(புங்குடுதீவு)

இறந்த ஒருவரின் அஸ்தி எடுக்க மயானம் சென்றவர்கள் மீது விசைப்படகில் வந்த நயினாதீவு கடற்படையினர் பீரங்கித் தாக்குதலை பல தடவைகள் மேற்கொண்டனர்.

புங்குடுதீவு 4-ம் வட்டாரத்தைச் சேர்ந்த சிவலைப்பிட்டி என்னும் பகுதியில் உள்ள மையவீடோன்றில் இருந்து சாம்பல் அள்ளுவதற்காக புங்குடுதீவு வடக்குப் பகுதியிலுள்ள கேரதீவுச் சுடலைக்கு சென்றிருந்த சமயம், கடற்படையினர் அக்கடல் பகுதியில் வந்து அக்கும்பலை நோக்கி பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர்.

அனைவரும் பாதுகாப்பான இடங்களை தேடி பற்றைக்குள்ளும், மரத்தடியிலும் விழுந்து படுத்துக்கொண்டனர். உயிர்சேதம் எதுவும் ஏற்படவில்லை. 101]

# 21 முதல் 23 வரை மாணவர் எழுச்சி நாள்

(யாழ்ப்பாணம்)

எமது மண்ணின் மீட்புக்காகவும், மக்களின் விடிவுக்காகவும் போராடி உயிர்நீத்த மாவீரர்களினுள் மாணவர்களின் பங்கு மறக்கமுடியாது. இந்த மாணவர்கள் பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரை பல திறமைகளைக் கொண்டிருந்தும் தனியே தாம் உண்டு தமது கல்வியுண்டு என்ற நிலையில் இருந்துவிடாது முழு மனிதர்களாக சமூக நோக்குடன் செயலாற்றினார்கள்.

இந்த வகையில் அன்னியப் படையுடனான நேரடி மோதலில் இறந்த மேஜர் முரளி. கப்டன் காந்தி, லெப். தர்சினி வீரவேங்கைகளான சதா, நிகிந்தா, நிதி, நிர்மளா, பஞ்சன். அமுதன், நிரா ஆகியோரையும் மேலும் அவர்கள் வழி சென்று இது வரை வீரமரணம் அடைந்த மாணவர்களையும் நினைவு கூர்ந்து 21 முதல் 23 வரையும் மாணவர் எழுச்சி நாட்களாக கொண்டாடுகின்றோம்.

இதற்காக 21ம் திகதி அனைத்து ஆண்டு எட்டுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கும் பொதுஅறிவுப்போட்டி நடைபெறும், 22ம் திகதி மாணவர்களின் இரத்ததானம் நடைபெறும். 23ம் திகதி கொக்குவில் சந்திக்கருகாமையில் ஆரம்பமாகும் எழுச்சி ஊர்வலமும் அதைத் தொடர்ந்து பொதுக்கூட்டமும் இடம்பெறும். (வி)

## மருத்துவ

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வொரு அரச ஊழியரும் மாதாந்தம் இருபது ரூபாவை மருத்துவ காப்புறுத்திட்டத்திற்கு செலுத்துவதன் மூலம் வருடத்துக்கு ஒன்றரை லட்சத்துக்கு குறையாத தொகையை காப்புறுதி நஷ்டஈடாக பெறலாம். இக்காப்புறுதித்திட்டம் அறுபது வயது வரை அமுல் செய்யப்படும். (எஸ்)

## பலாலி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கேதிகா, நிறஞ்சனு ஆகியோர் ஈழமண்ணைக் காப்பதற்காக வீரமரணமெய்தினர்.

நேற்றைய மோதலில் வீரமரணமடைந்த கப்டன் சுந்தரி முன்னர் வீரமரணமடைந்த கப்டன் வாசு, மேஜர் ஜேம்ஸ் ஆகியோரின் சகோதரியாவார். (வி)

## வள்ளங்கள்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யதாக அங்கிருந்துவரும் செய்திகள் கூறுகின்றன.

ஐந்து வள்ளங்களிலும் எவ்வளவு அகதிகள் பயணம் செய்தார்கள் என்பதும் எவ்வளவுபேர் பலியானார்கள் என்பதும் குறித்து இதுவரை தகவல் ஏதும் கிடைக்கவில்லை. (சி)

## கிழக்கு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

களில் 5 உயரதிகாரிகள் உட்பட 38 படையினர் புலிகளின் தாக்குதலில் பலியானதும் 30 இராணுவத்தினர் காயமடைந்ததும் குறிப்பிடத்தக்கது. (சி)

## தமிழ் பகுதித்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மலை தெரிவுசெய்யப்பட்டிருந்தது. திருமலையில் இதனை அமைக்க பௌத்த பிக்குகளும். சிங்களமீனவர்களுமே கடுமையாக எதிர்த்ததாகவும், சூழல் மாசடையுமெனக் கூறியே அவர்கள் இதனை எதிர்த்ததாகவும் இதையடுத்தே 'திக்வெல' என்ற இடத்திற்கு இது மாற்றப்படுவதாகவும் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் அரசியல் பின்னணிகளாலேயே இத்திட்டம் தமிழ்ப் பகுதிகளிலிருந்து சிங்களப் பகுதிக்கு மாற்றப் படுவதாக சில பொது அமைப்புகள் தெரிவித்துள்ளன. (சி)

## மட்டக்களப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அன்று காலை 9-45 மணியளவில், சாந்தாமலை அந்தோனியார்குளம் என்னும் இடத்தில் கால்நடைகளைப் பராமரித்துக்கொண்டு நின்ற 5 தமிழர்கள் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர் விபரம்: ப. மாசிலாமணி (வயசு 21) கொச்சிக்கொடி, ந. திருச்செல்வம் (வயது 18) கொச்சிக்கொடி, கி. நவரத்தினம் (வயது 20) கொச்சிக்கொடி, மு. உதயமூர்த்தி (வயது 20) 38ம் கொலனி, சி. அரியநாயகம் (வயது 18) பட்டிப்பளையம். (வி)

## ஜனாதிபதி

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி பிரேமதாசா அறிவிப்பார் என எதிர்பார்க்கப் படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் 38வது ஆண்டு நிறைவு விழா இம்மாதம் 23ந் திகதி வென்னப்புவாவில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் ஜனாதிபதி திரு. பிரேமதாசா பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார்.

இவ்விழாவில், ஜனாதிபதி நாட்டின் இன்றைய நெருக்கடி குறித்தும். இனப் பிரச்னைத் தீர்வுக்கான சில முக்கிய முடிவுகளை வெளியிடக்கூடும் எனவும் கொழும்பு வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது. (சி)